# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 172/மா/2023**

**நாள்: 21.07.2023**

திரு. வீ. முருகேஷ்,
ஆர்.ஏ.புரம், சென்னை- 600 028. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 9, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆர்.ஏ.புரம், தெற்கு கேசவ பெருமாள்புரம், 2வது குறுக்குத் தெரு, எண்.43/63ல் வசிக்கும் திரு. வீ. முருகேஷ் என்பவரின் 08.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.06.2023–ல் பெறப்பட்டு 172/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆர்.ஏ.புரம், தெற்கு கேசவ பெருமாள்புரம், 2வது குறுக்குத் தெரு, எண்.43/63ல் வசிக்கும் திரு. வீ. முருகேஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 08.06.2023 நாளிட்ட தனது மனுவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

சென்னை, தேனாம்பேட்டை, மண்டலம்-9, வார்டு – 122, நந்தனம் விரிவு பகுதி 1950-ம் ஆண்டு City Improvement Trust மூலம் Housing Board குடியிருப்புகளுக்காக மட்டும் உருவாக்கப்பட்டதாகும். குடியிருப்பு பயன்பாட்டுக்கு மட்டுமே வீடுகள் ஒதுக்கீடுச் செய்யப்பட்டது. இவ்வளவு பெரிய சென்னை மாநகரில் 1950-ம் ஆண்டு குடியிருப்பு வீடு பகுதிகளுக்கு வைக்கப்பட்ட நுழைவு வாயில் ஒன்றே ஒன்று இப்பகுதியில் தான் உள்ளது. அப்போதே இப்பகுதியில் அரசு மாணவர்கள் விடுதியும் உருவாக்கப்பட்டது. இதே பகுதியில் மாணவர்கள், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக City Improvement Trust மூலம் 10,000 ச.அடிக்கு குறைவான ஒரு சிறு விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. சமீப காலமாக குப்பை சேமிப்பு இடமாகவும், படப்பிடிப்பிற்காக வெளி நபர்களுக்கு வாடகை விடுதல், சுற்றியுள்ள சிறு தெருவின் வணிகப் பயன்பாட்டிற்காகவும், குடியிருப்பு பகுதிகளில் மது பார்கள் கொண்டு வந்து மாற்றியுள்ளனர். இதன் எதிரொலியாக புகை பிடிப்பது, மது அருந்துவது, ஆபாசமாக ஈடுபடுவது போன்ற சமூக விரோத செயல்களால்

அப்பகுதி மக்கள் மற்றும் மாணவர்கள் கடுமையான சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். இதனால் 5000க்கு மேற்பட்ட மாணவர்கள், குழந்தைகள், முதியோர்கள், பெண்கள் மற்றும் பொது மக்கள் ஏற்கனவே பயன்படுத்தி வந்த சிறு விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த இயலாத சூழல் உருவாகியுள்ளது.

<u>மாண்பமை முறைமன்றத்தில் பணிவோடு வேண்டப்படும் பரிகாரம் மற்றும் தீர்வு:-</u>

சென்னை மாநகராட்சியில் 1950-ம் ஆண்டு City Improvement Trust – மூலம் முதன் முதலில் உருவாக்கப்பட்ட சிறு விளையாட்டு மைதானம் மற்றும் அக்குடியிருப்பு பகுதியில், மது பார், பிற வணிக பயன்பாட்டினை தடுக்கவும், இனி வரும் காலங்களில் அனுமதிக்காமலிருக்க உத்திரவிட வேண்டுமென முறைமன்றத்தை வேண்டுகிறேன்.

08.03.2023 அன்றைய நாளிட்ட எனது மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கத்தவறிய மற்றும் அலட்சியமாக செயல்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் / அதிகாரிகள் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்திரவிட வேண்டுமென முறைமன்றத்தை வேண்டுகிறேன்.

மேற்கண்ட மைதானத்தை எந்த இடையூறுகளின்றி சீர்படுத்தி மாணவர்கள், பொது மக்கள் பயன்பாட்டிற்கு மற்றும் இப்பகுதியை ஏதுவான சூழலுக்கு கொண்டு வர பொது நலன் கருதி விரிவான விசாரணை மேற்கொண்டு தக்கதென கருதும் தகுந்த ஆணை / உத்திரவுகளை பிறப்பிக்க வேண்டுமென வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**2. 15.06.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதம் வாயிலாக மண்டலம் -9ன் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடமிருந்து இம்மனு மீதான அறிக்கை கோரப்பட்டது. ஆனால் அறிக்கை பெறப்படவில்லை.**

**3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 12.7.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-**

> "பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9 தேனாம்பேட்டை நந்தனம் விரிவு பகுதி அருகே அமைந்துள்ள விளையாட்டு மைதானம் மிகவும் பாழடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட விளையாட்டு மைதானத்தில் புதர்கள் மண்டியும், குப்பைக் கூளங்களுடன் காணப்படுகிறது. பள்ளி சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை மேற்கொண்டிருந்த அவ்விளையாட்டு மைதானம் பாழடைந்துள்ளதால், அம்மைதானத்தை சமூக விரோத செயல்களுக்கு சிலர் பயன்படுத்திகின்றனர். இது தொடர்பாக மாநகராட்சியில் புகார் மனுக்கள் அனுப்பப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை.
>
> எனவே மேற்கண்ட பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தையும் ஒரு சில இடங்களில் பழுதடைந்துள்ள சுற்றுச் சுவரையும் சீர் செய்து மேற்கண்ட மைதானத்தை பொதுமக்கள் பயன்படுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**4. பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 09ன் உதவி பொறியாளர் 12.07.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9 தேனாம்பேட்டை நந்தனம் விரிவு பகுதி அருகே அமைந்துள்ள விளையாட்டு மைதானம் தற்போது சீர்செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இரவு நேரத்தில் சமூக விரோதிகள் மேற்கண்ட மைதானத்தை பயன்படுத்துவது குறித்து காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேலும் மேற்கண்ட மைதானத்தில் சேரும் குப்பைக் கூளங்களை உடனுக்குடன் அகற்றப்படும் எனவும், மேற்கண்ட மைதானத்தை சமூக விரோதிகள் பயன்படுத்தாவண்ணம் தொடர்ந்து கண்காணிக்கப்படும் எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்."

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் தன்னுடைய மனுவில் சென்னை தேனாம்பேட்டை, மண்டலம்-9ன் நந்தனம் விரிவு பகுதியில் 1950ஆம் ஆண்டு City Improvement Trust மூலம் Housing Board குடியிருப்புகளுக்காக மட்டும் உருவாக்கப்பட்டு அதில் 10,000 ச.அடிக்கு குறைவான சிறு விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்ததாகவும், தற்போது அம்மைதானத்தை சமூக விரோத செயல்களுக்கு சிலர் பயன்படுத்துவதால், அப்பகுதி மக்கள் அம்மைதானத்தை பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளதாக தெரிவித்து அதனை சீர்செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு உத்திரவிட கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள நந்தனம் விரிவாக்கம் பகுதியில் உள்ள மைதானம் தற்போது சீர் செய்யப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்றும், அம்மைதானத்தை சமூக விரோதிகள் பயன்படுத்துவது குறித்து காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட மைதானத்தில் குப்பைகளை உடனுக்குடன் அகற்றப்படுகிறது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இருப்பினும் மனுதாரர் 8.3.2023 நாளிட்ட புகார் மனு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ல் அளித்தும், மனுதாரர் 8.6.2023 நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்றத்திற்கு அளித்த பின்பும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -9ன் அலுவலர்களால் நடவடிக்கை எடுக்காமல் இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்திரவிட்டபின்புதான், மேற்கண்ட விளையாட்டு மைதானம் சீர்செய்யப்பட்டுள்ளது. இது பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-9ன் அலுவலர்கள் பணியில் சுணக்கமாக இருந்துள்ளார்கள் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக் காட்ட விரும்புகிறது. இச்செயல் கண்டிக்கத்தக்கது ஆகும்.

தமிழ்நாடு அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மூலம் திறமையான இளைஞர்களை விளையாட்டில் ஊக்கப்படுத்தும் விதமாக பல செயல்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் 2023-2024ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"மக்கள் தொகையில் கணிசமான விகிதத்தை உள்ளடக்கிய இளைஞர்களைக் கொண்ட வளரும் நாடாக இந்தியா கருதப்படுகிறது. அவர்களின் அபரிதமான ஆற்றலை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் சிறந்த பாதைக்கு வழி நடத்துவது அவசியம். தமிழ்நாடு அரசு இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, படித்த மற்றும் திறமையை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் சமுதாயத்தில் ஆரோக்கியமான குடி மக்களாக மாறுவதற்கு ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கிட உறுதி பூண்டுள்ளது.

விளையாட்டு ஒருவரின் தனிப்பட்ட திறமையையும் சமூக நலனையும் அடைவதற்கான ஒரு சாத்தியக்கூறாக நிரூபிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத்திறன் அனைத்து வயதினரையும் கடந்து, இளைஞர்களுக்கும் விளையாட்டுக்கும் இடையிலான பிரிக்க முடியாத இணைப்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு உரிய காலத்தே வழிகாட்டுதல் அவர்களின் ஆற்றலை நல்வழிப்படுத்தி ஆரோக்கியமான மற்றும் ஆக்கபூர்கமான சமூதாயத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டுதலாக அமையும்.

தமிழ்நாடு அரசு தமது இளைஞர்களின் முழுமையான நலனுக்காகவும், விளையாட்டுகளின் விரிவான வளர்ச்சிக்காகவும், தனிநபர் அளவிலும் சமூக அளவிலும் எண்ணிடலங்கா பலன்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

தமிழ்நாடு அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் ஆகிய இரண்டிற்கும் முன்னுரிமை அளித்து வருகிறது. தமிழக இளைஞர்களின் நலன் மற்றும் விளையாட்டு வளர்ச்சிக்காகவும், அவர்களின் நலனுக்காகவும் தமிழ்நாடு அரசு பல முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தமிழ்நாடு நகர்புற நிதி (ம) அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO) மூலம் பூங்காக்களும்/விளையாட்டு மைதானங்களும், பெருநகர சென்னை மாநகராட்சி 1-4, 7-9 10,13 மற்றும் 14 ஆகிய மண்டலங்களில் அமைத்திட முடிவு எடுத்துள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி ரூ.20/- கோடி மதிப்பீட்டில் பூங்காக்களும், 11 விளையாட்டு மைதானங்களும் அமைத்திட ஒப்பந்தம் போட்டுள்ளது"

மேற்கண்ட திட்டங்களின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் அலுவலர்கள் மனுதாரர் குறிப்பிட்ட விளையாட்டு மைதானத்தை, மனுவை பெற்றவுடன் சீர்படுத்தியிருந்தால், அப்பகுதிவாழ் இளைஞர்கள்/சிறுவர்கள் தங்களது விளையாட்டு திறனை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக இருந்திருக்கும். மேலும், இம்மாதிரியான புகார் மனுக்கள் வருவது தவிர்க்கப்பட்டிருக்கும் என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது".

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன், உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட மைதானத்தில் தேங்கிய குப்பைக் கூளங்களை உடனுக்குடன் அகற்றவும், அம்மைதானம் சமூக விரோதிகளின் கூடாரமாக

பயன்படுத்தாவண்ணம் தொடர் கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கவும், மேலம் மண்டலம்-9ன் கட்டுப்பாட்டில் இருக்கும், இதர மைதானங்களையும் சீர்செய்து சிறுவர்கள் / இளைஞர்களின் விளையாட்டு திறனை ஊக்குவிக்க முறையாக பராமரிப்பதை உறுதி செய்யவும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-9ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 21-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. வீ. முருகேஷ்,
   எண்.43/68, 2வது குறுக்குத் தெரு,
   தெற்கு கேசவ பெருமாள்புரம்,
   ஆர்.ஏ.புரம், சென்னை – 600 028.
2. ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 9, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.4, 4வது குறுக்குத் தெரு, லேக் வியூ சாலை,
   சென்னை – 600 034.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.